PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 123

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை: ஐப்பசி 20௳ வியாழன் (5—11—53) ☆ ★ ★ வெளியூர்: ஐப்பசி 21௳ வெள்ளி (6—11—53)

நெசவாளி குடும்பம் அதோகதி!

—— (:) ——

ஒன்றாக மடிய ஒரே குழியில் சிறுவர்களைப் பிணைத்தனர்!

—— (:) ——

எட்டு மாத கர்ப்பிணியும் கணவனுடன் கிணற்றில் விழுந்து மாண்ட வேதனை!

—— (:) ——

சலகண்டபுரத்தில் மனம் நோகும் காட்சி

சலகண்டபுரம், நவ. 4—

"கைத்தறி ஜவுளி வியாபாரம் செய்துகொண்டிருந்த ஒரு கௌரவமிக்க குடும்பம், வியாபாரம் நசித்துபோகவே, கைத்தறி நெய்தனர். அந்த வேலையும் நசித்துபோகவே, 'பாவு' செய்து பிழைத்தனர். அதிலும் கஷ்டம் கண்டு, கடைசியில் பிச்சை எடுக்க மனமின்றி, கிணற்றில் விழுந்து, அக்குடும்பமே தற்கொலை செய்துகொண்டுள்ளது," என்ற செய்தியை மன வேதனையுடன் தருகிறோம்.

1—11—53 ஞாயிறு இரவு இவ்வூர் 2-வது வார்டில் வசித்துவந்த சுமார் 40 வயதுடைய சுப்பையா பண்டாரம் என்ற கைத்தறி நெசவாளர், தொழில் இல்லாமல், வறுமையின் காரணத்தால், தன் மனைவி (8 மாத கர்ப்பிணி) வீரம்மாள், குழந்தைகள் வீரண்ண பண்டாரம் (8 வயது), விசாலாட்சி (6 வயது) ஆகியவர்களோடு குடும்பமாக இவ்வூர் பெரிய கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்கள். இன்று பிணங்கள், கிணற்றங்கரையில் எடுத்துப் போடப்பட்டது.

இந்தக் கோர மரணங்கள் பற்றி ஊரில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

குழந்தைகள் இரண்டும் பிரிந்து விடாதபடி, ஒரு கோலை வைத்துக் கயிற்றால் பிணைக்கப்பட்டிருந்ததாம்.

போலீசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

—(ந. நி)

நெசவாளர்களுக்கு சென்னையில் கஞ்சித் தொட்டி!

சென்னை, நவ. 4—

வெளி மாவட்டங்களிலிருந்து சென்னை நகருக்கு குடிபெயர்ந்திருக்கும் ஏழை, நெசவாளர்களின் நிவாரணத்திற்காக கஞ்சித் தொட்டி யொன்றை நகரசபை வெகு சீக்கிரமே ஆரம்பிக்கும்.

மூர்மார்க்கெட்டுக்கு எதிரிலுள்ள ராஜா சர் ராமசாமி முதலியார் சத்திரத்தில் கஞ்சித் தொட்டி அமைக்கப்படும்.

ஒரு வேளை இந்த ஏற்பாடு நாளையே தொடங்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இடம் பெயர்ந்து வந்துள்ள நெசவாளர்களுக்கு அடையாளச் சீட்டுகள் தரப்படும். அடையாளச் சீட்டைக் காட்டித்தான் கஞ்சி பெறவேண்டுமாம்!

தொண்டர் படை திரளுகிறது!

லண்டன், நவ 5—

மார்ஷல் டிட்டோ, டிரீஸ்ட நகரில், தன் பலத்தைப் பெருக்கத் தொண்டர் படை திரட்டி வருகிறார். தன் பக்கமிருந்து நாஜிகளை எதிர்த்துப் போராடிய வீரர்கள் இதில் சேர்ந்திருக்கின்றனர். ஒரு மாதத்திற்குள்ளேயே 50 000 தொண்டர்கள் சேர்ந்திருக்கின்றனர்.

இத் தொண்டர் படையை, யூகோஸ்லேவியா ஆதிக்கத்திலுள்ள டிரீஸ்ட் 'பி' பகுதியில் வைக்கப்படும் இத்தாலியர்களும் அணிவகுப்பு நடத்தி வருவதால் எந்த நிமிடத்திலும் கைகலப்பு ஏற்படுமோ வென்று நேச நாடுகள் அஞ்சுகின்றன. —நேபன்

மராமத்து மந்திரி இராமநாதபுரம் ராஜாவின் கண்டுபிடிப்பு

காலம் தாழ்ந்தது! ஆனால் கருத்து நிறைந்தது!

காரைக்குடி, நவ. 3—

இந்நகர் ரோட்டரி சங்கத்தில், மராமத்து மந்திரி இராமநாதபுரம் ராஜா அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சிலரிடத்திலேயே எல்லாச் செல்வமும் குவிந்து கிடப்பதும், தாழ்த்தப்பட்டுக்கிடப்பவர்களுக்கும், அழுத்தப்பட்டுக் கிடப்பவர்களுக்கும் நல்ல வாய்ப்பு அளிக்க மறுக்கப்படுவதுமே, இன்று நாட்டில் இருந்து வரும் குழப்பத்துக்கு படையாகும்."

பிரதமரைக் கொன்றவன் தப்பினான்

பீரட், நவ. 4—

லெபனான் பிரதமரைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு வழக்கின்போது ஆஜராக இல்லாதபோது தண்டிக்கப்பட்ட ஸால்மன் என்பவன் சில நாட்களுக்கு முன் சிரியாவில் கைது செய்யப்பட்டான்.

அவனை லெபனான் சர்க்காரிடம் ஒப்படைக்கக் காவலுடன் கொண்டு சென்றபோது வழியில் தப்பிவிட்டான். சிரியா—லெபனான் போலீசார், அவனைத் தேடி வருகின்றனர். —நேபன

தன்னலங் கருதாப் பெருந்தகை!

நோபிள் பரிசு தொகையை குஷ்டரோக சிகிச்சைக்கே செலவிட முடிவு

லண்டன், நவ. 4—

டாக்டர் ஆல்பெர்ட் ஷிவிட்சருக்குக் கிடைத்துள்ள நோபின் பரிசுத் தொகை பூராவையும், ஆப்பிரிக்காவில் குஷ்டரோக நிவாரண நிலையம் ஏற்படுவதற்குச் செலவிடப்படும் என்று தெரிகிறது.

குஷ்டரோக சிகிச்சைக்கான புது மருந்தை இவர் கண்டுபிடித்திருக்கிறார்; இவர் விரும்பியிருந்தால் எவ்வளவோ துறைகளில் நிபுணராக இருந்திருக்கலாம்; ஆனால், இவர், மக்களுக்குச் சேவை செய்வதையே பெரிதாக எண்ணி, ஆப்பிரிக்காவில், நீக்ரோகளுக்கு வைத்திய சிகிச்சை செய்யும் சேவையை மேற்கொண்டார். —நேபன்

மலேயாவில் நிரந்தரமாகத் தங்கி வாழும் தென் இந்தியருக்கு நிலம்

கோலாலம்பூர், நவ. 4—

மலேயாவில் நிரந்தரமாகத் தங்க விரும்பும் தென்னிந்தியருக்கு, நிலம் வழங்க, சர்க்கார் ஆவன செய்யுமென்று கூட்டாட்சி அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை யொன்று கூறுகிறது.

அநேகத் தென்னிந்தியர், மலேயாவிலேயே வாழ இஷ்டப்படுவதாயும் அந்த அறிக்கை கூறுகிறது.

முன்பு இங்குவந்த தென்னிந்தியர்கள், கொஞ்ச காலத்திற்குத் தங்கிவிட்டு, பின்னர் தாயகம் திரும்பிக் கொண்டிருந்தனர்; ஆனால், இப்போது நிலைமை மாறிவிட்டது. பலர் மலேயாவிலேயே நீடித்து வாழ்நாளைக் கழிக்க விரும்புகின்றனர்.

மலேயாவில், தென்னிந்தியர்கள் தொடர்ந்து வாழவேண்டும் என, ஹை கமிஷனர் சொல்லியிருந்ததையும், அறிக்கை நினைவுறுத்தியது.

மத்திய சர்க்கார் 'பிடியில்' பூந்தோட்டங்கள்!

புதுடில்லி, நவ. 5—

சரித்திரப் பிரசித்தி பெற்ற பூந்தோட்டங்களை, மத்திய சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து சேர்ப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இப்போது சில தோட்டங்கள் மாகாண சர்க்கார்களின் பராமரிப்பில் இருக்கின்றன.

ஆக்ராவில் தாஜ் மஹால் தோட்டம், சென்னை, ஐதராபாத் ஆகிய இடங்களிலுள்ள தோட்டங்கள் அடுத்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படலாம்.

ஆந்திராவில் நெசவாளர் பட்டினிப் பட்டாளம்

நவ. 16-ல் ஊர்வல அணிவகுப்பு

விஜயவாடா, நவ. 4—

கைத்தறி தொழிலுக்குப் பாதுகாப்பளிக்க, வேட்டி, புடவை உற்பத்தியை இத்தொழிலுக்கு ஒதுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, ஆந்திர மாநில கைத்தறி நெசவாளர் சங்க நிர்வாகக் கமிட்டி கேருவைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மேற்படி நடவடிக்கையை சர்க்கார் மேற்கொள்ளத் தவறினால் நெசவாளர்கள் அறப்போர் தொடுக்க நேருமென நேற்று நடைபெற்ற நிர்வாகக் கமிட்டியில் எச்சரிக்கை செய்யப்பட்டது.

நவம்பர் 16-ந் தேதி முதல், 25-ந் தேதிவரை பட்டினிப் பட்டாள ஊர்வலம் நடத்துமாறு, கமிட்டி மாவட்ட நிலையங்களுக்கு கட்டளையிட்டது.

குவிந்து கிடக்கும் மில் ஜவுளிகளை விறக அண்மையில் சர்க்கார சலுகை அளித்தது கண்டிக்கத் தக்கதென்றும் கமிட்டி வற்புறுத்தியது.

கைத்தறி துணி உற்பத்தி அதிகரிப்பு

கட்டாக், நவ. 4—

ஒரிசா மாகாணத்தில், இந்திய சர்க்கார் அளித்த பணஉதவி காரணமாக கைத்தறி நெசவு உற்பத்தி அதிகரித்துள்ளது.

ஒரிசாவில். ஆண்டில், 5 கோடி கெஜம் துணி உற்பத்தி செய்யப்படுகிறது. இது ஒரிசா தேவையில் 5-ல் ஒரு பங்குதான் ஆகும் எல்லாத் தறிகளும் முழு மூச்சுடன் வேலை செய்தால, அம் மாகாணத்தின் பாதி தேவை பூர்த்தி செய்யப்படலாம் எனக் கூறப்படுகிறது.

சைதை தோழர்கள் விடுதலை

29—9—53 அன்று தடைமீறி பொதுக் கூட்டத்தில் பேசியதற்காக 3 வாரம் சிறைத் தண்டனை அடைந்த தோழர்கள் க. முருகேசன், த. இளங்கோ இருவரும் 3—11—53 அன்று விடுவிக்கப்பட்டார்கள்.

மேற்கொண்டு சலுகை இல்லை!

ஜவுளி கமிஷனர் அறிவிப்பு

பம்பாய், நவ. 2—

ஜவுளித் தொழிலுக்கு தற்போது மேற்கொண்டு எதிர் வரி, ஏற்றுமதி வரிச் சலுகை ஏதும் சர்க்கார் காண்பிக்கும் எண்ணம் இல்லையெனவும், அளவுக்கு மிஞ்சிய நிவாரணம் அளித்தாகிவிட்டதெனவும், ஜவுளி கமிஷனர் டி. சுவாமிநாதன் நிருபர்களிடம் கூறினார்.

பருத்திக் கட்டுப்பாடு தளர்த்தப் படுமென்றும், மில்களுக்கு பிரதான வாரியாக பருத்தி சப்ளை ஒதுக்குவதை ரத்து செய்யப் போவதாயும், ஆனால் ஐதராபாத்திற்கு தெற்கேயுள்ள பற்றாக்குறை பகுதிகளுக்கு இந்தச் சலுகை இராதென்றும், போக்குவரத்து நீடிக்குமென்றும் அவர் மேலும் கூறினார்.

"பத்திரிகை சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்."

கராச்சி, நவ. 5—

பாகிஸ்தான் அரசியல் சட்டத்தில், பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாக்க தனிப் பகுதி சேர்க்கப்பட வேண்டுமென்று பத்திரிகையாளர்கள் கேட்டிருக்கின்றனர்.

"பத்திரிகை சுதந்திரம் மறுக்கப்படக் கூடாது; அது மக்களின் பிறப்புரிமை," என்று மூகம்மது அலி ஜின்னா கூறிய பொன்மொழிகளைக் கொண்ட புத்தகமொன்றை கராச்சி பத்திரிகையாளர் சங்கம் தயாரித்து, அரசியல் நிர்ணய சபை மெம்பர்களுக்கு அனுப்பியிருக்கிறது.

லண்டன், நவ 5—

பிரிட்டிஷாரும், இந்தியரும் சரிபாதி மூலதனம் போட்டு 40 லட்சம் பவுன் செலவில் ஒரு மோட்டார் தொழிற்சாலை கட்டுவது பற்றி இங்கு பேச்சு வார்த்தைகள் நடந்து வருகிறது.

இத் தொழிற்சாலையை பம்பாயிலாவது, தென்னிந்தியாவிலாவது கட்டப்படலாமெனச் சொல்லப்படுகிறது.

சந்தாதார்களைச் சேர்க்க விநோத முயற்சி

லண்டன், நவ. 3—

வாரப் பத்திரிகையான "தி பீபிள்" என்ற பத்திரிகை, சந்தாதாரர்களைச் சேர்க்க ஒரு விநோதமான முயற்சியில் இறங்கியிருக்கிறது. பெண் சந்தாதாரர்களுக்கு கர்ப்பத்திலிருப்பது ஆணா, பெண்ணா என்று இலவசமாகச் சொல்லப்படும். ஆனால் அவர்கள் ஆறு மாத கர்ப்பிணிகளாக இருக்க வேண்டும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஐவர் சிறையில்
இன்று
66-வது நாள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 5—11—1953 வியாழன்

பழிவாங்கு படலம்!

தனது ஆட்சி முறைக்கு எதிர்ப்பு செய்கிறவர்கள் அனைவரையும், அவர்கள் எவ்வளவு அமைதியான அரசியல் நடவடிக்கைகளில் கலந்துகொண்ட போதிலும், எந்த முறையைக் கொண்டேனும் பழிவாங்கி விடுவது என்றே ஆச்சாரியார் சர்க்கார் கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறது போலவே தெரிய வருகிறது. ஆச்சாரியார் முன்பு ஒரு நாள் இம்மாநிலத்தின் முதல் அமைச்சராக இருந்த காலத்தில், வேண்டுமென்றே இந்தி மொழியைக் கட்டாய படுத்தித் திணித்தார். அதை எதிர்த்து அறப்போராட்டத்தில் தமிழர்கள் குதித்தனர். இப்பொழுது போலவே, அப்பொழுதும் இந்தி எதிர்ப்பு அறப்போராட்டம் எவ்வளவோ அமைதியாகத்தான் நடைபெற்றது. அறப் போராட்ட வீரர்களை, அந்தக் காலத்தில் 'சட்டமில்லா சட்டம்' என்று காங்கிரஸ் கட்சியினராலேயே கூறப்பட்ட கிரிமினல் திருத்தச் சட்டத்தைக் கொண்டு, கடுந் தண்டனைகளைக் கொடுத்து மகிழ்ந்தது ஆச்சாரியார் சர்க்கார். காங்கிரஸ் கட்சியினாலேயே வன்மையாகக் கண்டிக்கப்படும் சட்டத்தை, இந்தி எதிர்ப்பாளர்கள் மீது பிரயோகிப்பது நியாயமாகுமா என்ற கேள்வி சரமாரியாகக் கிளம்பியது. அவ்வளவுக்கும் ஆச்சாரியார் சொன்ன பதில் ஒன்றே ஒன்று தான். அதாவது, 'இரவில் நுழைந்தத் திருடர்களை எதைக் கொண்டு அடித்தால்தான் என்ன?' என்று, சர்வ சாதாரணமாக, ஆனால் மிகமிக அகந்தையோடு ஆச்சாரியார் அன்று கேட்டார்.

தனது போக்கிற்கும் நோக்கிற்கும் எதிர்ப்பு கிளம்புகிறது என்றால், அந்த எதிர்ப்பு அறநெறி வழுவாததாக இருந்தாலும், இன்றியமையாததாக இருந்தாலும், கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி எல்லாம் பொருந்தியனவாக இருந்தாலும், அதை எந்த வழியை மேற்கொண்டேனும் அடக்கி ஒடுக்க வேண்டும் என்ற ஆசையைத்தான் அமைச்சர் ஆச்சாரியார் கொள்ளுவார் என்பது அனுபவ உண்மை. சிறு கழி கொண்டு தாக்கினால் போதும் என்பதற்கும் துப்பாக்கிக் குண்டுகளையே தூது அனுப்பும் குணம் ஆச்சாரியாருக்குள்ள தனிச் சிறப்பு.

எதிர்ப்புகளை ஒடுக்க அவர் எடுத்துக்கொள்ளும் முறை, அறத்திற்கு அரண் செய்வதா அல்லது அறத்தைத் தேய்ப்பதா என்பதைப் பற்றியெல்லாம் துளியும் கருதிப் பார்க்காத அறவுள்ளம் கொண்டவர் அமைச்சர் ஆச்சாரியார்!

நியாயாநியாயத்தைச் சீர்தூக்கிப் பார்க்காமல், அமர்ந்துள்ள அதிகாரபீடம் அவரிடம் ஒப்படைத்துள்ள உரிமையை, தடியடி கொடுத்தல், துப்பாக்கியால் சுடல் என்ற அக்கிரமங்களில் துஷ்பிரயோகம் செய்வதுகூட, மகாமகா நியாயமானது என்று கூறும் நீதி சட்ட புத்தகங்களில் இடம் இருக்கிறது. ஆனால், எதிர்ப்பாளர்கள் மீது தாக்குதல் நடத்த, சில பல காங்கிரஸ் களப்பலிகளை ஏவிவிட, அமைச்சர் ஆச்சாரியாருக்கு எந்தச் சட்ட திட்டம் துணை செய்கிறதோ நமக்கு விளங்கவில்லை. சட்டமா சட்டமில்லையா, தர்மமா அதர்மமா என்பதை எல்லாம் சிந்திக்காமல், சித்தத்தைச் சோரவிடாமல், (சனாதன) தர்மம் கெட்டு (சம) அதர்மம் தலைதூக்குகின்ற பொழுதெல்லாம் கண்ணன் அவதரிப்பான் என்ற கண்ணன் காட்டிய வழித்தோன்றல் அல்லவா இந்த அமைச்சர் ஆச்சாரியார்? இவரிடமா வரமுறையை எதிர்பார்ப்பது?

கலலக்குடி, தூத்துக்குடி ஆகிய இரு இடங்களிலும் ஒரே நாளில், ஒரே காலத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்து இருக்கும பொழுது, இரண்டு இடங்களிலும் நடைபெற்றச் சம்பவங்களை விசாரணை செய்ய ஒரே நாளில் விசாரணைக் குழுக்களை நியமிப்பதுதான் நியாய புத்தி படைத்தவர்களின் செயலாகும். ஆனால், அமைச்சர் ஆச்சாரியாரோ, தூத்துக்குடி குழுவை முதல் நாளும், கல்லக்குடி விசாரணைக் குழுவை அடுத்த நாளும் நியமித்திருந்தார். இந்த ஒரு நாள் வித்தியாசத்தில் உள்ள அந்தரங்கத்தை அப்பொழுதே நாம் அம்பலப்படுத்தி இருக்கிறோம்.

எதிர்ப்பாளர்களைப் பழிபோட்டுத் தலைவாங்குவதற்கே, தூத்துக்குடி விசாரணையை அவசர அவசரமாக அமைச்சர் ஆச்சாரியார் தோற்றுவிக்கிறார் என்று நாம் விளக்கிக் கூறி இருந்தோம். இந்த நமது யூகத்தை ஆச்சாரியாரின் பிற்கால நடவடிக்கை சந்தேகத்திற்கு இடமில்லாமல் விளக்கி விட்டது. வேண்டா வெறுப்பாகத்தான் கல்லக்குடி விசாரணை நாடகம் நடத்தப்படுகிறது என்றும், நாம் அப்பொழுது குறிப்பிட்டிருந்தோம். அதையும், அமைச்சர் ஆச்சாரியாரின் பிற்காலப் போக்கு மெய்ப்பித்து விட்டது. பிறகு,

நமது தி. மு. கழகத்தைச் சேர்ந்த 96 தூத்துக்குடி தோழர்கள்மீது சதி செய்தல், கொலை செய்ய யத்தனித்தல், கொள்ளையடித்தல், சேதப்படுத்தல், தீ வைத்தல் போன்ற பற்பல குற்றங்களைச் சுமத்தி, இவைகளை மெய்ப்பிக்க 91 சாட்சியங்களையும் உருவாக்கி, 'தூத்துக்குடி சதி வழக்கு' என்ற பயங்கரப் பெயரால் வழக்கும் போட்டாகி விட்டது. ஆச்சாரியார் சர்க்காரால். நீதிமன்றத்தில் நமது தோழர்களின் நிரபராதித்தன்மையை நிரூபித்து வெற்றி பெற்றே தீருவோம் என்ற திட நம்பிக்கை நமக்கு இருக்கின்ற காரணத்தால், இதுபற்றி நாம் வருத்தப்படத் தேவையே இல்லை.

குற்றம் சாட்டப்பட்டுள்ள தி. மு. கழகத் தோழர்கள் அனைவரும் தூத்துக்குடி நகரைச் சேர்ந்தவர்கள். அவர்களில் பெரும்பாலோர் ஏழைப் பாட்டாளி மக்கள். குற்றம் சாட்டப்பட்டுள்ள 96 தோழர்களில் 63 தோழர்கள் வெளியில் இருக்கிறார்கள். சர்க்கார் தரப்பில் சாட்சியம் கூற வேண்டியவர்கள் 91 நபர்கள் வேறு உள்ளனர். இவர்களிலும் பெரும்பாலோர் தூத்துக்குடி வாசிகளேயாவர். இந்த எண்ணிக்கைக்குக் குறையாத எதிர்தரப்பு அதாவது நமது தோழர்களின் சாட்சிகள் வேறு இருக்கிறது. இவர்களும தூத்துக்குடி வாசிகளாகவேதான் இருக்க முடியும்.

தூத்துக்குடியிலேயே வழக்கு நடைபெற்றால்தான், திருநெல்வேலிக்குச் செல்லும் போக்குவரத்துச் செலவும், அங்கு செலவாகும் சிற்றுண்டி, உணவுச் செலவும் பொதுவாக இருதரப்பினருக்கும், குறிப்பாக நமது கழகத் தோழர்களுக்கும் செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாமல் இருக்கும்.

கடுகளவு நியாய புத்தியும், மனித உள்ளமும் கொண்டவர்களில் யார் அமைச்சராக இருந்தாலும், மேலே குறிப்பிட்ட நடைமுறையைத்தான் மேற்கொள்ளுவர்.

ஆனால், அமைச்சர் ஆச்சாரியார் மூளைதான் விசித்திரமானதாயிற்றே, பழி வாங்கும் சுபாவந்தானே பனிசென்று அவர் புத்தியில் உதயம் ஆகும்? எனவே, தூத்துக்குடி சதி வழக்கை திருநெல்வேலிக்கு அழைத்துச் சென்றுவிட போலீஸ் அதிகாரிகளுக்கு அமைச்சர் கட்டளை பிறப்பித்து விட்டார்.

இதை எதிர்த்து, தூத்துக்குடிக்கே வழக்கை விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்று நமது தோழர்கள் சார்பில், மாவட்ட மாஜிஸ்திரேட்டிடம் மனு ஒன்று கொடுக்கப்பட்டு இருந்தது. அந்த மனுவின்மீது விசாரணை முடிந்து, மாஜிஸ்திரேட்டினால், தீர்ப்பு நேற்று கூறப்படுவதாக இருந்தது.

இந்தத் தருணத்தில், அமைச்சர் ஆச்சாரியார், அவசர அவசரமாக, தூத்துக்குடி வழக்கை தனித்த நீதிமன்றத்தில் விசாரிக்கப் போவதாகவும், அதுவும் திருநெல்வேலியில் விசாரிக்கப் போவதாகவும் ஒரு கட்டளையை 26-10-53ல் பிறப்பித்து விட்டார்.

நீதிமன்றம் செயல்புரியும் கட்டிடம் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. நீதிபதியும் நியமிக்கப்படவில்லை. இந்தத் தருணத்தில், மாவட்ட மாஜிஸ்திரேட் எங்கு மனுதாரர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்து விடுகிறாரோ என்று அச்சம் கொண்டு, மாஜிஸ்திரேட்டின் அதிகார வரம்பைக் கட்டுப்படுத்தும் முறையில், ஒரு உத்தரவை ஆச்சாரியார் சர்க்கார் பிறப்பித்து விட்டது. ஆச்சாரியார் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரம், எங்கெங்கு வகையில் துஷ்பிரயோஜனப் படுத்தப்படுகிறது என்பதற்கு, இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

நமது தோழர்களின் வழக்கு, மாற்ற மனுவைப் புறக்கணித்த மாஜிஸ்திரேட், தமது தீர்ப்பில் கூறியிருப்பது சிந்திக்கத்தக்கது.

"குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்கள் அனைவரும் தூத்துக்குடியைச் சேர்ந்த தொழிலாளர்கள் அல்லது ஊழியர்களாவர். அவர்களைத் திருநெல்வேலியில் விசாரிப்பது என்பது கண்டிப்பாகச் சங்கடம் தரக்கூடியது தான். கடைசியாகக் கொடுத்த வாய்தாவிற்கும், இன்றைக்கும் உள்ள இடைக்காலத்தில், இந்த வழக்கை விசாரிக்க என ஒரு தனி முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தைத் திருநெல்வேலியில் நியமிக்க சர்க்கார் கட்டளை பிறப்பித்து விட்டதினால், சர்க்கார் தரப்பு வாதத்தில் குறிப்பிட்டுள்ளது போல், கி. பி. கோ. 526 (2) பிரிவின்படி, இந்த வழக்கை மாற்றுவதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது" என்று தீர்ப்பில் கூறி இருக்கிறார்.

நீதிமன்றங்களின் நியாயமான நடைமுறைகளில் கூட தலையிட்டு, நாட்டு மக்களின் உரிமைகளைக் குலைப்பதென்பது எவ்வளவு இலகுவாக நிறைவேற்றக்கூடிய காரியமாக ஒரு சர்க்காருக்கு இருக்கிறது என்பதை, நாம் கருதிப் பார்க்க வேண்டும்.

ஜாமீனில்விட மறுத்து, சிறையில் தள்ளி வைத்திருக்கும் 33 தி. மு. கழகத் தோழர்களையும், அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பிற்கான போலீஸ் படையினர்களும், 91 சர்க்கார் சாட்சிகளும், மற்ற பரிவாரங்களும் திருநெல்வேலிக்கு வந்து போவது என்றால், எவ்வளவு பணச் செலவாகும் என்பதை, இன்னமும் காங்கிரசில் உள்ள இரண்டொரு நல்லவர்களைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

இவர்களுக்குச் செலவாகும் பணத்தை ஆச்சாரியார் சொந்தச் சொத்திலிருந்தா செலவிடப் போகிறார்? அல்லது மற்ற அமைச்சர்களாவது தங்கள் வருமானத்தைக் கொடுத்து இந்தச் செலவை சரிகட்டப் போகிறார்களா? அது ஒன்றுமில்லையே! நாட்டு மக்கள் கொடுத்த வரிப் பணந்தானே, ஒரு தனி மனிதரின் விருப்பு வெறுப்புக்கு விரயமாகப் போகிறது?

இவ்வளவு பெருந்தொகையை தண்டத்துக்குக் கொட்டி அழுதால்தான், நீதி நிலைநாட்டப்படும் என்று அமைச்சர் ஆச்சாரியார் நினைப்பது போலவே மற்ற காங்கிரஸ் பெரியவர்களும் தீர்மானித்திருக்கிறார்களா என்பது விளங்க வேண்டும். விளக்கம் நமக்கல்ல—நாளை உருவாக்கப்பட இருக்கும் நாட்டு வரலாறுக்காகத்தான் கேட்கிறோம். விரைவும் நம்முடையதல்ல—சென்ற கால வரலாறு வெளியாக்கும் விரைவாகும்!

அமைச்சர் ஆச்சாரியாரின் பழிவாங்கும் குணம் மேலும் மேலும், அனுமார் வால்போல் நீண்டுகொண்டே போகிறது. நமது தி. மு. கழகத் தோழர்கள் இது கண்டு பிறகாவது, தூத்துக்குடி வழக்கின் கடுமையை உணர்ந்து, வழக்கைத் திறமையாக நடத்தி வெற்றிகாண வழிவகை செய்ய முன்வர வேண்டும். அப்போதுதான், பழிவாங்க முனைந்துள்ள அமைச்சர் ஆச்சாரியாரின் முயற்சியை நமது கழகத்தால் முறியடிக்க முடியும். காலம் தாழ்த்துவது, நிலைமையை நெருக்கடிக்குள்ளாக்கும். உடனடியாக உங்கள் உதவி தேவை இருதயத்தைத் தடவிப் பார்த்து உதவி செய்ய முன் வாருங்கள்.

தாராள நன்கொடை!

லண்டன், நவ. 4—

லண்டனில் உள்ள 10,000 முஸ்லிம்கள், தங்கள் தொழுகையை நடத்தவும், ஒரே சமயத்தில் 2000 பேர்கள் ஒன்று கூடவும், ரீஜண்ட் பார்க் அருகில், ஓர் மத்திய மசூதி கட்டிடம் கட்டப்படும்.

கட்டட நிதிக்கு 2 லட்சம் பவுன் சேர்ந்திருக்கிறது. நைஜாம் 50,000 பவுன் நன்கொடையாக அளித்திருக்கிறார்; எகிப்து சர்க்கார் 20,000 பவுன் கொடுத்திருக்கிறது. —ராய்டர்

கவலையளிக்கிறதாம்!

கௌஹாத்தி, நவ. 5—

அஸ்ஸாமில், நாகர் மலை ஜாதியினரால் சமீபத்தில் அதிகாரிகள் கொலை செய்யப்பட்டது, அஸ்ஸாம் பூராவிலும் மிக்க கவலையளித்து வருகிறது. இம்மாதிரியான சம்பவம் 43 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தடவை நடந்திருக்கிறது அப்போது, இரு உத்தியோகஸ்தர்கள் கொலை செய்யப்பட்டனர்.

பம்பாய் தி. மு. கழகம்

பம்பாய், நவ. 2—

27—10—53-ல், பம்பாய் தி. மு. கழகச் செயற்குழு கூட்டம், தோழர் செல்லச் செழியன் தலைமையில் கூடியது. அதுபோது, கழகப் போக்குவரத்து, முன் கூட்ட அறிக்கை வரவு – செலவு, கணக்குகள் ஒப்புக் கொள்ளப்பட்டன. நவம்பர் திங்கள் முதல் வாரத்தில் தோழர் என். எஸ். இளங்கோவை அழைப்பித்து, நான்காவது ஆண்டு நிறைவு விழா நடத்துவதெனவும், விழாவிற்கு, தோழர்கள் குறள்தாசன் தலைவராகவும், எம். எஸ். கணபதி வரவேற்பாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. மாதுங்கா கிளைக் கழகத்திற்கு மத்திய கழகம், பொதுக் கூட்டம் நடத்துவதற்கு ரூ. 25 நன்கொடை கொடுப்பதெனவும், கல்லக்குடி போராட்டத்திற்கு மேலும் ரூ. 50 அனுப்புவதெனவும், முடிவு செய்யப்பட்டது. பின்னர், கழகத் தோழர் எஸ். ஏ. பி. சுவாமி அவர்களின் தந்தையார் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

லண்டன், நவ. 5—

மேற்கிந்திய தீவுகளில் ஒன்றான டிரினிடாட்டில், மற்ற தீவுகளிலிருந்து ஏழை இந்தியர்கள் குடியேறக்கூடாது என தடை விதிக்கப்பட்டிருப்பதால், 147 இந்தியர்கள் இப்போது நாட்டைவிட்டு வெளியேற வேண்டியிருக்கிறது.

“மத்திய சர்க்காரின் அவசரச் சட்டம் பூரண திருப்தி அளிக்காது”

தோழர் வி. சக்கரை செட்டியார் அறிக்கை

அகில இந்திய, தமிழ் நாடு தொழிற் சங்கக் காங்கிரஸ் தலைவர் தோழர் வி. சக்கரை (செட்டியார்) பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறுவதாவது:—

“சமீபத்தில் இந்திய அரசாங்கம், வேலை நிறுத்தப்பட்ட காலத்தில் தொழிலாளர்களுக்கு நிவாரணம் தரவேண்டும் என்ற உத்திரவுகளைப் பிறப்பித்திருப்பது வரவேற்கத்தக்கதே. தொழில் அதிபர்கள், தொழிலாளரின் பஞ்சப்படி உட்பட அவர்களின் மொத்த வருமானத்தில் 50 சதவிகிதம் நிவாரணக் கூலியாகத் தரவேண்டும் என அரசாங்க உத்திரவு சொல்லுகிறது. ஆனால் 45 நாட்களுக்கு மட்டும்தான் அந்தவைகயா வசதி தொழிலாளர்க்குக் கிடைக்கும் பிறகு கிடைக்காது. தொழில் நிறுத்தப்பட்ட பூரா காலத்திற்கும் அத்தகைய நிவாரணம் தரப்பட வேண்டும்.

மேலும், 50-க்கு மேற்பட்ட தொழிலாளர் உள்ள நிறுவனங்களில்தான் அமுல் நடத்தப்படும் என்பதை, 1948-ம் வருடத்திய தொழிற்சாலைகளுக்கு ட்பட்ட எல்லாத் தொழிற்சாலைகளிலும் அது அமுல் நடத்தப்பட வேண்டும் என்று திருத்தியமைக்க வேண்டுகிறேன்.”

சவுகரியத்திற்காக செய்து கொண்ட திருமணங்கள்

சட்டப்படி இனி செல்லாது

லண்டன், நவ. 4—

“சவுகரியத்திற்காக செய்து கொள்ளப்படும் திருமணங்கள் இனி சட்டப்படி செல்லாது” என்று ஒரு வழக்கில், பிரிட்டிஷ் நீதிபதி தீர்ப்புக் கூறியுள்ளார்.

ஹங்கேரியிலிருந்து தப்பிவந்து விட விரும்பிய ஒரு மாது, பிரெஞ்சு பாஸ்போர்ட் கிடைக்க வேண்டி, ஒரு பிரெஞ்சுக்காரரை மணந்துகொண்டார். ஆனால், ஹங்கேரிய எல்லையைத் தாண்டியதும் விவாகம் செல்லாது என்று இருவரும் ஆரம்பத்திலேயே ஒப்புக்கொண்டிருந்தனர். இந்த உடன்படிக்கைப்படியே தன் திருமணம் செல்லாது, விவாக ரத்து அளிக்கப்பட வேண்டுமென்று கோர்ட்டில் அவள் வழக்குத் தொடர்ந்தாள்.

சர்க்கார் தரப்பு வக்கீல் இதை எதிர்த்து, அச்சம், அன்பம் காரணமாகத்தான் விவாக ரத்து அளிக்க வேண்டுமென்றார்.

சம்பந்தப்பட்டவர், அச்சம் காரணமாகவே இரும்புத் திரை நாட்டிலிருந்து தப்பியோட விரும்பியிருக்கிறார்; இதற்கு வழி செய்யவே திருமணமும் செய்து கொண்டுள்ளார் என்று நீதிபதி கூறி, விவாக ரத்து அளித்தார். —ரேபன்.

★★★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

★

எலந்தங்குடி

7—11—53 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

வி ஏ பாண்டியன்

என். சிட்டப்பா

★

சென்னை

7-11-53 மாலை 5-30 மணிக்கு

இடம்:

புரசைவாக்கம், அன்னதான சமாஜ மண்டபம் (குளத்தருகில்)

தலைவர்: தே. து. இராசன்

பேசுவோர்:

டி. வி. நாராயணசாமி

முகவை ஆர் எஸ். பாண்டியன்

வி. எஸ். கோவிந்தராசன்

★

பம்பாய்

7—11—53 மாலை 6-30 மணி

இடம்:

நப்பூ கார்டன், மாதுங்கா (C.R.)

தலைவர்: ஜே. ஜோதிநாயகம்

வரவேற்பாளர்:

இ. எஸ். எஸ். பிச்சையா

பேச்சாளர்:

என். எஸ். இளங்கோ

★★★★★★★★★★★★

இசையில் மயங்கி வளர்ச்சி அடையும் ‘தொட்டால் சுருங்கி’ செடி!

அண்ணாமலை சர்வகலாசாலை போராசிரியர் ஆராய்ச்சி

சென்னை, நவ. 4—

சங்கீதத்திற்கு, மனிதன், பிராணிகள் மட்டுமின்றி, தாவர வர்க்கங்களில் சிலவும் கட்டுப்பட்டு உணர்ச்சி பெறுகிறது என்பது, அண்ணாமலை சர்வகலாசாலை தாவர போராசிரியர் டாக்டர் டி. சி என் சிங்கும், ஆராய்ச்சி மாணவி தோழியர் ஸ்டெல்லா பொன்னையாவும் நடத்தியுள்ள ஆராய்ச்சிகளிலிருந்து தெரியவருகிறது.

சங்கீதம் மூலம், ‘தொட்டால் சுருங்கி’ செடியை நன்கு வளரச்செய்ய முடியும் என்பதை, இவர்கள், தங்கள் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்துள்ளனர்.

டாக்டர் சிங் இதுபற்றி கூறியதாவது:—

“நான்கு, ‘தொட்டால் சுருங்கி’ செடிகளை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டோம். இரண்டைத் தனித்தனியாகப் பிரித்து வைத்து, மற்ற இரண்டிற்கு மட்டும், தினம், காலையிலும் மாலையிலும் 6 மணியிலிருந்து 7 மணிக்குள் 25 நிமிட நேரம், வாயலினில் ‘மாயாமாளவகௌளை’ வாசித்து வந்தோம்.

நான்கு செடிகளுக்கும் ஒரே தண்ணீர்தான் ஊற்றப்பட்டு வந்தது. இரு மாதங்கள் 10 நாள் தினமும் விடாது மாயாமாளவகௌளை ராகம் வாசிக்கப்பட்டது. இச்சங்கீதத்தைக் கேட்ட இரு செடிகளும் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்தன வென்பது ஒவ்வொரு ஞாயிறன்றும் ஆராய்ச்சி செய்யப்பட்டது.

சங்கீதம் கேட்ட செடி இரண்டும், மற்ற இரு செடிகளைவிட இலைகள் நல்ல பசுமை நிறமுடையதாகவும், இரண்டு மடங்கு அதிக உயரமாகவும், குட்டிக் கிளைகள் ஏராளமாகவும் பெற்றிருந்தன.

★

இராகங்களை எந்த நேரத்தில் பாடலாம்?

அதனால் நன்மை என்ன?

சென்னை, நவ. 4—

ஒவ்வொரு இராகத்தையும் அதனதற்காகக் குறிப்பிட்டுள்ள வேலையில்தான் பாடவேண்டும் என்று வாத்தியக்காரர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள்.

உதாரணமாக, பூபாளம் அதிகாலையில், பொழுது விடிவதற்கு முன்பே பாடப்படவேண்டும்; பிலகரி, காலை 6 முதல் 7 மணி வரையில் பாடுவது சரியாகும். நடுப்பகலில் மாயாமாளவகௌளையும், மாலையில் ‘பூர்விகல்யாணி’யும், இரவில் 10-லிருந்து 12 வரை ஷண்முகப் பிரியாவும் பாடவேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த நேரங்களில், இந்த ராகங்களை வாசிப்பது மூலம், தாவர வர்க்கங்கள் பயனபெறுகிறதா என்பதை, அண்ணாமலை சர்வகலாசாலை தாவரப் போராசிரியர் ஆராய்ச்சிகளை சர்வகலாசாலை லாபரேட்டரியில் நடத்தவிருக்கிறார். —ரேபன்.

‘விசால ஆந்திரம்’ கிடைத்துவிட்டது!

தலைநகரம் ஐதராபாத்தான்!

ஆனால் ஒரு துறையில் மட்டும்தான்!

புதுடில்லி, நவ. 4—

‘விசால ஆந்திரம்’ ஐதராபாத் நகரை தலைமையாகக் கொண்டு ஏற்கனவே உருவாகி விட்டது. இதில் ஒரு அற்புதம் என்னவென்றால், இந்த விசால ஆந்திரம் இப்போழுது ஒரே ஒரு துறையில் உருவாகி இருப்பதுதான். வருமான வரி இலாக்காவைப் பொறுத்தவரையில் விசால ஆந்திரம் அமைந்திருக்கிறது.

அக்டோபர் முதல் தேதி முன் வரையில் ஆந்திரம் உள்ளிட்ட சென்னை மாநிலத்திற்கு ஒரே மொத்தமாக ஒரு வருமான வரி இலாக்கா வட்டாரம் இருந்து வந்தது. ஆந்திரம் பிரிந்த பிறகு ஐதராபாத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரு வருமான வரி வட்டாரமாக ஆக்கப்பட்டு இருக்கிறது.

சைதாப்பேட்டை தி. மு. கழகத் தோழர்களுக்கு

★

6—11—53 வெள்ளி காலை 8-30-மணியளவில் “தூத்துக்குடி வாரம்” கொண்டாடப்படும். அதுசமயம், எல்லாக் கழகத் தோழர்களும் இதையே அழைப்பாகக் கொண்டு வர வேண்டுமாறு தோழர் முருகேசன் கேட்டுக் கொள்கிறார்.

காஞ்சி நகரசபையில் ஆட்குறைப்பு

காஞ்சீபுரம், நவ. 1—

1954—ஏப்ரல் 1-ந் தேதி முதல் நகரசபையில் ஆள் குறைப்பு செய்வதென்று நேற்று மாலை நடைபெற்ற காஞ்சிபுரம் நகரசபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இதனால் வருடத்திற்கு ரூ 20,000 மிச்சமாகுமெனக் கருதப்படுகிறது.

‘சாதாரண’ இனத்தில், வருமானத்தைவிட செலவு ரூ. 57,605 அதிகரித்துவிட்டதாகவும், செகண்டரி கல்வி, பொது சுகாதாரம் ஆகியவற்றில் செலவைக் குறைக்குமாறு, கவுன்சிலுக்கு, மார்ச் 28-ந் தேதி சர்க்கார் உத்தரவிட்டிருந்தனர். இதன் பேரில்தான் ஆட்குறைப்பு செய்ய நகரசபை முடிவு செய்துள்ளது.

17 பதவிகளில் ஆட்குறைப்பு செய்யலாமென்று கமிஷனர் சமர்ப்பித்த குறிப்பில் தெரிவித்திருந்தார்; இதில், 14 பதவிகளை கவுன்சில் ஒப்புக்கொண்டுமேலும் 4 அம்சங்களை, தானே இணைத்துக் கொண்டது.

4 ஆண்டுகளுக்கு ஒரு முறை, ரிவிஷன் வேலை பார்க்க கமிஷனருக்கு அதிகப்படி ஊதியம் கவுன்சில் கொடுக்க வேண்டாமென்று சர்க்கார் மறுத்துவிட்டனர்.

இவ்வுத்தரவை ஆலோசிக்குமாறு கவுன்சில், சர்க்காரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

கடத்திச் சென்று காதல் மணம்

கப்பல் தொழிலாளி சாகசம்!

லண்டன், நவ. 4—

பிரிட்டிஷ் கப்பல் தொழிலாளியான தாமஸ் பின்ன் ஈராக் சென்றபோது, பத்தொன்பது வயதான ஈராக் அழகியான ஜீன் காலாசிப் என்பவளை கப்பலில் கடத்திக்கொண்டு வந்துவிட்டார். இந்தக் காதலர்களுக்கு இருவிலாந்து நகரமொன்றில் திருமணம் முடிந்தது.

கடத்திக்கொண்டு வந்ததாக மூன்று மாத சிறை தண்டனை அனுபவிக்கும் தாமசுக்கு திருமணம் செய்துகொள்ள ஜாமீனில் விடுதலை கிடைத்தது.

அதே மாதிரி, ஜீன், அனுமதியின்றி நாட்டுக்குப் பிரவேசித்ததற்காக இரண்டு மாத சிறைத் தண்டனை அனுபவிக்கிறாள். இவருக்கும் ஜாமீனில் விடுதலை கிடைத்தது. இருவரும் இப்போது அப்பீல் செய்துகொள்ளப் போகின்றனர். —ரேபன்

அரச குடும்பத்தினருக்கு தொப்பிகள் செய்பவர்

இந்தியாவில்தான் தொழிலை ஆரம்பித்தார்

லண்டன், நவ 4—

இன்று லண்டனில் பிரபல தொப்பி வியாபாரியாக இருக்கும் ஏஜ்தாருப், 23 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் தான் தன் தொழிலை ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் இவருக்கு தொழில் நடக்காமல், சிலவேளைகள், பட்டினிகூட இருந்தார். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக வியாபாரம் விருத்தியாகி பம்பாய், கல்கத்தா, டில்லி, சிம்லா ஆகிய இடங்களில் தொப்பிக் கடைகள் வைத்தார். ஐரோப்பியர்களுக்கு, இவர் விதம் விதமான தொப்பிகளைச் செய்து தருவார்.

இதன் பிறகு “பாஷன்” நிறைந்த லண்டனுக்கு தன் இருப்பிடத்தை மாற்றிவிட்டார். இன்று அரச குடும்பத்தார்களுக்கு இவர் தான் அலங்காரமான தொப்பிகளைச் செய்து கொடுக்கிறார்.

பம்பாயில் திடீர் வேலை நிறுத்தம்

பம்பாய், நவ. 3—

இம்மாதம் 4-ந் தேதிக்கு முன்பாக தங்களது சம்பளங்களைக் கொடுக்காத தற்காலிக மத்திய ரயில்வே தலைமை தொழிற்சாலையிலுள்ள 300 தொழிலாளர்கள் காலையில் திடீரென வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள். இதன் விளைவாக ரயில்வே லைன் உயர்தர அதிகாரிகளும், மற்றவர்களும் வேலை செய்ய நேர்ந்தது.

பழங்குடி கவிஞர் முருகேசனார் கலா நிகழ்ச்சி

பம்பாய், நவ. 4—

1—11—53ல், இரட்டை மலை சீனிவாசன் பந்தாட்டக் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் பி. எஸ். ஆனந்தராஜ் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அதுபோது, நவ. 14, 15 தேதிகளில் கழக சார்பில், கட்டவாடி மைதானத்தில், அமைக்கப்படும், ‘அயோத்திதாஸ் பந்தலி’ல், மேற்படி நிகழ்ச்சியை, முறையே தோழர்கள் எம் வி. துரைசாமி தலைமையிலும், பி எஸ். கோவிந்தசாமி சேட் தலைமையிலும் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அம்மாபேட்டை தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

24—10—53 மாலை தோழர் பி. எம் கோபால் தலைமையில் அம்மாபேட்டை மார்க்கெட் தெருவில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே. ஏ. வெங்கடாசலம், ஏ மாரியப்பன், கே. எஸ். மணி, கஞ்சப்பன், அன்புக்கரசு, கே. ஏ. நடராசன், பி. கே வரதராசலு, சிற்றணி சுப்ரமணியம் ஆகியோர் பேசினர்.

மத்திய ஆப்பிரிக்காவிலும் நிறத் திமிர்!

லண்டன், நவ 4—

மத்திய ஆப்பிரிக்காவிலும் நிறத் திமிர் தலைகாட்ட ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. வெள்ளையர் நகரத்தைக் காப்பாற்ற வேண்டியது அவசியம் என்று அங்குள்ள கட்சியைச் சேர்ந்த ஒருவர் முழங்குகிறாராம்! —ரேபன்

ஆந்திர மாநிலத்திற்கு நத்தை, நண்டு அளிக்கும் தலைவலி

விதைத்த நெல்களைத் தோண்டி உண்கின்றனவாம்

சென்னை, நவ. 5—

தனி மாநிலம் ஏற்படுத்தி, நிர்வாகம் நடத்த ஆரம்பித்து ஒரு மாதமேயான ஆந்திரர்களுக்கு, நத்தைகளும், நண்டுகளும் பெரும் தொல்லையைக் கொடுக்க ஆரம்பித்துள்ளன.

கிருஷ்ணா, குண்டூர் ஜில்லாக்களிலுள்ள தாழ்ந்த இடங்களில் நஞ்சை நிலங்களில் இவை, உணவுப் பொருள் உற்பத்தியைப் பாதிக்கும் வேலைகளைச் செய்து வருகின்றன.

இதனால் ஏற்படும் நஷ்டம், ஒரு ஏககராவுக்கு ரூ 50 முதல், ரூ. 100 வரை ஏற்படலாம் எனத் தெரிகிறது.

நத்தைகள், விதைத்த நெல்களைத் தோண்டி சாப்பிட்டு விடுவதுடன், புதிதாக நடப்பட்டுள்ள நாற்றுக்களையும் அழிக்கின்றனவாம்.

தென்மேற்குப் பருவமழை காலத்தில்தான இந்த நத்தைகள் அதிகம் காணப்படுகின்றன இரவு வேளைகளில், நண்டுகள் நாசம் விளைவிப்பதில், தன் பங்குகளைச் செய்கின்றன.

இந்த நண்டுகளையும், நத்தைகளையும் ஒழித்துக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொன்னேரியில் தி. மு. கழகத் துவக்க விழா

31—10—53ல், பொன்னேரியில் தி. மு கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழியர் அருண்மொழி, நடிகமணி நாராயணசாமி, காஞ்சில் மனோகரன் ஆகியோர் பேசினர். கூட்டத்திற்கு அரங்கர் நடராசன் தலைமை வகித்தார்.

தி. மு. கழகச் செயற்குழு கூட்டங்கள்

★

எழும்பூர்

31-10-53ல், சென்னை எழும்பூர் 32-வது வட்ட தி. மு. கழக கிளையின் செயற்குழு கூட்டம், தோழர் டி. என். இராமன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, 15—11—53ல், கல்லக்குடி நாள் கொண்டாடவும், கல்லக்குடி வழக்கு நிதிக்கு பணம் திரட்டி அனுப்பவும், கல்லக்குடி வழக்கை வாபஸ் பெறக் கோரி சென்னை முதலமைச்சரை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேத்துப்பட்டு

25-10-53ல், சென்னை சேத்துப்பட்டு 33-வது வட்ட தி. மு. கழக (கிளை) உறுப்பினர் கூட்டம் தோழர் நா. சுந்தரேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, ஆட்சியாளரின் போக்கையும், எதிர்க்கட்சியினரின் [illegible]களையும், தி மு கழகம் மேற்கொள்ள வேண்டிய பணியினையும் விளக்கி பல தோழர்கள் பேசியபின் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

சேவூர் (வ.ஆ.மாவட்டம்)

25—10—53ல், தோழர் வி இ. செயராமன் தலைமையில், தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, திரு. வி. க. மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தமை, மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஆலந்தூர்

28—10—53ல், தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் தோழர் இர. கோதண்டராமன் தலைமையில் கூடி, ஆலந்தூர் பிரசவ விடுதியைத் திறக்க பஞ்சாயத்து போர்டார் கவனிக்க வேண்டுமென்றும், இங்கு [illegible] சுகாதாரம், சாலைகள் ஆகியவை கவனிக்க வேண்டுமென்றும் ஆலந்தூர் பஞ்சாயத்து போர்டைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானங்கள் நிறைவேறின.

சாத்தான்குளம்

25—10—53ல், நடைபெற்ற தி. மு. கழக செயற்குழு கூட்டத்தில், திரு வி. க. மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், கழக வளர்ச்சிக்குப் பத்திரிகை, பணம் இவைகளை உதவி [illegible] தோழர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரித்ராநதி

25—10—53ல், மன்னார்குடி அரித்ராநதி தி. மு. கழக செயற்குழு கூட்டம் தோழர் ரா. ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, [illegible], கல்லக்குடி போராட்டத்தில் உயிர்நீத்த தோழர்களுக்கும், திரு வி. க. மறைவிற்கும் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு, ரயில் நிறுத்தப் போராட்டத்தில் சிறை சென்ற மன்னார்குடி தோழர்களைப் பாராட்டியும், நேருவின் பேச்சைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிலக்கோட்டை

21—10—53ல், தோழர் இ. காத்தான் தலைமையில் கழக அங்கத்தினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தீர்மானங்கள் பல கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இடைப்பாடி

1—11—53ல், தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் தோழர் பா. பண்டரிநாதன் தலைமையில் நடைபெற்றது. அது சமயம், கல்லக்குடி சதிவழக்கை வாபஸ் வாங்கக் கோரியும், தோழர்களை விடுதலை செய்யுமாறு வற்புறுத்தியும், சென்னை மாநில முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டும், கல்லக்குடி சதிவழக்கு நிதிக்காக செயற்குழு உறுப்பினர்கள் ரூ. 10 அனுப்புவது எனவும் தீர்மானிக்கப்பட்டன

இலங்கை

23—10—53ல், இலங்கை தி மு கழக மத்திய கிளையின் செயற்குழுக் கூட்டம், தோழர் உவரி சோசப் சுந்தரத்தின் தலைமையில் கூடியது. தோழர்கள் ராசன், காசிநாதன், தர்மபால முருகியல், அ காமசாமி, சண்முகவேல் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன

திருவிடமருதூர்

25 10 53ல், தோழர் கணேசன் இல்லத்தில், நிர்வாகக் குழு தோழர் டி. வ. இராமசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தி மு. கழகத் தலைவர்களை விடுதலை செய்யக் கோரியும், கல்லக்குடி சதி வழக்கை வாபஸ்பெறக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பேட்டை

26-10-53ல், நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பேட்டை தி மு கழக செயற்குழுக் கூட்டம் கழகக் கட்டிடத்தில் நடைபெற்றது. தோழர் க. கணபதி தலைமை வகித்தார். அதுபோது ரயில் நிறுத்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டு சிறை சென்று மீண்ட தோழர்கள் கே. என். ராசா, என். சேக் முகம்மது, ஆகியோருக்குப் பாராட்டு தெரிவித்தும், தமிழர்களை காட்டுமிராண்டிகள் என்று கூறிய நேரு பண்டிதரை கண்டித்தும், திரு. வி. க. மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், கல்லக்குடி சதிவழக்கை வாபஸ் வாங்கும்படி அரசியலாரை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேறின.

தண்டுரை—பட்டாபிராம்

24-10-53ல, தி மு கழக செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் ஜெகமணி செயலாளராகவும், எம். பக்தவத்சலம் துணைச் செயலாளராகவும், கே. எம். பாபு பொருளாளராகவும், ஆர். சேஷ அருணாசலம், கே. டி பாபு, சே என். ஆறுமுகம், பாண்டியன், தானியல், த. து. சண்முகம், எம் பி. சாமி ஆகியோர் செயற்குழுவினராகவும், எம். பக்தவத்சலம் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கலை விழா

சென்னையில் இம்மாதம் (15—11—53) ஞாயிறு அன்று தோழர் டி பி ஜெகந்நாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட தி. மு. கழக வார இதழ், "மக்கள் மணி" வளர்ச்சிக்காக, "கலை விழா" நடைபெற இருக்கிறது அறிஞர்கள், கவிஞர்கள், சினிமா நடிகர்கள் பங்கு கொள்வார்கள் என அமைப்பாளர் அறிவிக்கிறார்

தச்சூரில் தி. மு. கழகம் துவக்கம்

கல்லக்குறிச்சி, தச்சூர் கிராமத்தில், 5—10—53ல், தி. மு. க. கிளைக் கழகம், தோழர் இதயசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் மூக்கன் செயலாளராகவும், கண்ணன் உதவி செயலாளராகவும், அய்யப்பெருமாள் பொருளாளராகவும், கலியராயன் மாவட்டப் பிரதிநிதியாகவும், கமிட்டி உறுப்பினர்களாகத் தோழர்கள் அய்யாசாமி, தங்கவேலு, கருப்பன், சுப்பிரமணியன், ரங்கன், மாரிமுத்து, பச்சமுத்து, தங்கவேல் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோழர் ராமசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் [illegible], த. மாணிக்கவாசகம், ஏ. தே. நீரபதி, அருமைநாதன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

முத்து படிப்பகம்

மதுரை இலட்சுமிபுரம் வட்டாரம் தி. மு. கழக உட்கிளை செயற் குழு கூட்டம் 1-11-53ல் தோழர் சி. சண்முகசுந்தரம் தலைமையில் கூடியது. அதுபோது, தோழர்கள் ப. இளவரசு செயலாளராகவும், வாழவந்தான் துணைச்செயலாளராகவும், அருணாசலம் பொருளாளராகவும், சி இளங்கோவன், மா சி ஞானம் மாவட்டப் பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முடிவில் பல தீர்மானங்கள் நிறைவேறின.

சிந்தனைப் படிப்பகம்

கோவை, நவ. 1—

லாலி ரோடு சிந்தனைப் படிப்பக செயற் குழுக் கூட்டம் 27—10—53ல் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் க. வெற்றிவேந்தன் செயலாளராகவும், மு சர்தார் துணைச் செயலாளராகவும், மா கனகு பொருளாளராகவும், தமிழ்மணி [illegible] உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தி. மு. கழகச் செயற்குழு தேர்தல்கள்

★

பொள்ளாச்சி

18—10—53-ல், தி மு. கழக செயற்குழு கூட்டம் கவுன்சிலர் பி கே திருமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. அதுபோது புதிய செயலாளராகத் தோழர் மா. ஜயமணி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* * *

24—10—53-ல், தி மு கழக செயற்குழுக் கூட்டம் தோழர் மா. ஜயமணி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் எம். விஜயராகவன் துணைச் செயலாளராகவும், எம். விஜயசாரதி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தாத்தையங்கார் பேட்டை

17—10—53-ல், தி. மு கழக செயற் குழுக் கூட்டம் தோழர் எஸ். அயோத்தி தலைமையில் நடைபெற்றது. அது சமயம், செயலாளர் இயக்கக் கொள்கைக்கு விரோதமாக நடந்துகொண்டபடியால் அவரை விலக்கிவிடுவதென தீர்மானித்தும், தற்காலிகத் துணை செயலாளர் தோழர் எஸ் அயோத்தி அவர்களையே செயலாளர் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

சலகண்டபுரம்

22—10—53-ல், சலகண்டபுரம் தோரமங்கலம் கிராமத்தில தோழர் ப. கண்ணன் தலைமையில் தி மு கழக உறுப்பினர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள்: சு. மாரிமுத்து செயலாளராகவும், ஆ ஆண்டியப்பன் துணைச் செயலாளராகவும், க. கந்தசாமி பொருளாளராகவும், மா. ஆறுமுகம் மாவட்டப் பிரதிநிதியாகவும், சி. அண்ணாமலை, ஆ ஆண்டியப்பன், சு. மாரிமுத்து, மா ஆறுமுகம், சி. அருணாசலம், எலை அண்ணாமலை, கு. குருநாதன், தொ. பழனியப்பன், க. கந்தசாமி, அ. திருவண்ணாமலை, அ அண்ணாமலை, கே என். கலைச்செல்வன், க அண்ணாமலை ஆகியோர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் க.கந்தசாமி, ப செல்லப்பன், மா. ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், தி மு. கழகம், தோரமங்கலம் கிளை என்ற பெயரால் ஒரு கழகம் துவக்குவதென்று முடிவு செய்யப்பட்டும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

வதூர்பட்டி

1—11—53-ல், தோழர் வ. ப நடராசன் அவர்கள் தலைமையில், தி மு. கழகச் செயற்குழுக் கூட்டம் கூடியது அதுபோது, தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

காங்கேயம்

இவ்வூர் தி. மு கழகத்தின் செயற்குழுவின் புதிய அமைப்பில், தோழர்கள்: எம். வேலுசாமி செயலாளராகவும், எ எஸ். நாதன் துணைச் செயலாளராகவும், தணிகாசலம் பொருளாளராகவும், மற்றும் தோழர்கள்: கா. வெ. முத்தையா, பதுமன், முத்து, பழனிசாமி, கோவிந்தராசு, கே. என். அய்யாச்சாமி, காச்சிமுத்து, முருகேசன், கே. எம். பழனிச்சாமி, எஸ். கோவிந்தராசு, கே பி பானு, இராமசாமி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நாகலாபுரம்

19—10—53ல், கூடிய தி மு. கழக உறுப்பினர் கூட்டத்தில், செப்டம்பர் மாத வரவு—செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டும், மதுரை தோழர் எம். ஆர். கணேசன் அவர்களால் 23—9—53-ல், நடந்த கலை நிகழ்ச்சி கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டும், கல்லக்குடி சதி வழக்கு நிதிக்கு ரூ 5 அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டும், திரு வி க மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேறின

கடையநல்லூர்

30—10—53-ல், நகர தி. மு. கழக புத்தாண்டுத் தேர்தல் சி. செல்லையா தலைமையில் நடைபெற்றது அதுபோது, ஐ கந்தசாமி செயலாளராகவும், பி அன்பரசு துணைச் செயலாளராகவும், சி நடராசன் பொருளாளராகவும், பி அன்பரசு, சி சண்முகம் ஆகியோர் மாவட்டப் பிரதிநிதிகளாகவும், பதின்மூன்று தோழர்கள் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேப்பாக்கம்—சென்னை

40-வது வட்ட தி. மு கழக செயற்குழுக் கூட்டம் 29-9-53ல் நெ 13, அருணாசல ஆச்சாரி தெருவில் நடைபெற்றது கழக செயலாளரின் ராஜினாமாவை ஏற்றுக்கொண்டு, தோழர் கோ. தாமோதரனை செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

நரசிங்கபுரம்

25-10-53-ல், சேலம் ஜில்லா, ந. புரம் தி மு கழகத் தேர்தல், செயலாளர் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் என். கே. நல்லவாணி செயலாளராகவும், என். எம். மாணிக்கம் துணைச் செயலாளராகவும், என் சி. பூமாலை பொருளாளராகவும், என. என். பெரியசாமி மாவட்டப் பிரதிநிதியாகவும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் என். கே. கணபதி, என். வி. துரைசாமி, என வி குப்பன், என. ஏ. சின்னக்கண்ணு, பொன்ராமன், என் ஏ முத்துசாமி, என். எஸ். கோவிந்தசாமி, என். என். நடேசன, வி. துரைசாமி, என். பி குப்புசாமி, எம். பொன்னுசாமி, சி. குமாரசாமி, அ. பெரியதம்பி, எ ஆதிமூலம், கே. கோவிந்தன், என. சி. சுப்பிரமணியன், என். டி பெரியசாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

'ஐயோ! அவர் போனால் எங்கள் கதி என்னவது?' என நிதி அமைச்சர் அலமருதல்

"பதுமைகளை மாற்றுவது போல் மந்திரிகளை மாற்றக் கூடாது!"

அமைச்சர் அவை குழப்பம் பற்றி காங்கிரஸ் ஊழியர்கள் கவலை கொள்ளக்கூடாதாம்!

'அவர் போகமாட்டார்! போகவேமாட்டார்!' என்று சி. ஆர்.-க்கு ஆறுதல் கூறுகிறார் நிதி அமைச்சர்!

கோவை, நவ. 4—

"அமைச்சரவைச் சிக்கல்கள் பற்றிய கவலை காங்கிரஸ் ஊழியர்களுக்கு இருக்கவேண்டியதில்லை; அவைகளைப் பற்றி, உயர்ந்த தலைவர்களும், அதற்காக இருக்கும் காங்கிரஸ் பார்லிமெண்டரிக் குழுவும் கவனித்துக் கொள்ளும்."

"ஆச்சாரியார், தாமாகப் போகட்டும் என எண்ணிச் சிலர் அவரைப் பயமுறுத்திப் பார்க்கிறார்கள். வயோதிகக் காலத்தில் ஏன் சிரமம் என்று எண்ணி, ஆந்திரப் பிரிவினைக்குப் பின் பதவியிலிருந்து விலகிக் கொள்ளவே ஆச்சாரியார் எண்ணியிருந்தார். இருக்கும் நிலைமையை உத்தேசித்தும் அவர் பதவியிலிருந்து விலகவேண்டும் எனச் சிலர் வற்புறுத்திப் பார்ப்பதை ஒட்டியும், அவர், தொடர்ந்து பதவியிலிருக்க முடிவு செய்து விட்டார். தமிழ் நாடு சீர்குலையக்கூடாது என்பதற்காகவே அவர் பதவி வகிக்கிறார். அவர் போகவேண்டுமென்று ஆசைப்படுபவர்கள் அவர் கட்டாயம் பதவியிலிருக்க வேண்டும் என்று வற்புறுத்தினால், ஒருகால் அவர் போகலாம்; ஆனால், பயமுறுத்தலால் அவர் பதவியை விட்டு விடமாட்டார்."

"அமைச்சரவை மாறுமோ என்னவென்று சிலர், ஏதோ காரணத்திற்காக எண்ணுகின்றனர். பலமுறை அமைச்சரவை மாறியதால் நம் மாகாணத்தின் மதிப்பு குறைபட்டிருக்கிறது அத்துடன் சிறு குழந்தைகள் அடிக்கடி பொம்மைகளை மாற்றி அழகு பார்ப்பது போன்று சிலருக்கு அமைச்சரவைகள் மாறுவதும் புதிதாக அமைக்கப்படுவதைக் காண்பதும் ஆகிவிட்டது."

—இவ்வாறு, சென்னை நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம், கோவை, காங்கிரஸ் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, குப்பு நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி. என், அண்ணாதுரை, எம்.ஏ.